முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

10.10.2024

1. ஞான வள்ளலாய் அரங்கனும்
ஞான சோதியுள் கலந்துமே
ஞானபண்டிதன் அனுகூலம் தர
ஞானச்சுடரில் வெளிப்பட்டுமே

2. வெளிப்பட்டுமே என் சீடர் மக்களை
வினை வென்று காத்தருள
வெளிப்பட்டேன் அருட்சுவடி வழி
வேந்தன் வார அருளாசி ஆக

3. ஆகவே குரோதி நங்கை திங்கள்
அறிவிப்பேன் அரங்கன் யானும்
வகைபட நான்காம் குருவார ஆசியாக
வழங்குவேன் என் மக்கள் நன்மை கண்டிட

4. கண்டிட அரங்கமகான் தானும்
கலியினில் குலதெய்வமாக
தொண்டர் பெருமக்களை காத்து
தெய்வநெறி காட்டி அருளுவேன்

5. அருளவே அரங்கன் என்
அகத்திய சன்மார்க்க நெறி
இருளை மாயைதனை விரட்டி
எந்தவித ஆபத்தும் அணுகா

6. அணுகா நல்வழி காட்டியே
அனைவரும் சமம் எனும்
ஞான வழிதனை காட்டியே
நம்பிக்கையூட்டி மக்களை

7. மக்களை ஆசான் தலைவனாக
மகானாக காத்து வருக
தேக்கமின்றி ஞானக்குடிலாம்
தேசிகன் என் பிரணவக் குடிலை

8. குடிலை அணுகித் தொடர
குறைவிலா அன்னதானத்தில்
தேடி வந்து பொருளுதவி செய்து
தேசிகா அரங்கா என முழங்கி

9. முழங்கி வருதல் காண
மொழிகுவேன் வரும் மக்களுக்கு
கலங்கமற ஞானிகள் துணை
கந்தப் பெருமானின் துணை

10. துணை கூடி அரங்கன் என்
தெய்வீக சோதி வடிவிலே
இணையிலா எல்லா வரமும்
இலகுவாகக் கிட்டி வெற்றி

11. வெற்றியும் வளர்ச்சியுமாக
வேலவன் அம்சமாக உலகில்
ஏற்றம் சகல வகைதனிலும்
எங்கும் சிறப்பாய் நடந்தேறும் அரங்கமகான்
குருவார அருளாசி முற்றே.

–சுபம்–